## DEPOSITION OF WITNESS

(ChapterXXIII Code of Criminal Procedure)

-----------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR

**STC No. 2512/2019**

**Date : 23.04.2025**

**PW3 சையத் ஜூபேர் இப்ராகிம் த/பெ. சர்புதீன்**

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

எதிரி எங்களுடைய வங்கியில் எப்போது சேமிப்பு கணக்கு துவங்கினார் என்றால் சரியாக ஞாபகமில்லை. 2009ம் ஆண்டாக இருக்கலாம். காசோலையில் உள்ள தொகை நிரப்பப்பட்ட கையெழுத்தும், எதிரி செந்தில்குமார் என்ற கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். காசோலையில் உள்ள தொகை நிரப்பப்பட்ட கையெழுத்தும், எதிரி செந்தில்குமார் என்ற கையொப்பமும் வேறுவேறு பேனாவினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இரண்டும் புளூ பேனாவனால் எழுதப்பட்டுள்ளது. நிரப்பபட்ட பகுதி டார்க் புளூவாகவும்,கையொப்பம் உள்ள பகுதி லைட் புளூவாகவும் உள்ளது என்றால் சரிதான். எதிரி மொத்தம் 36 காசோலைகளுக்கு ஸ்டாப் பேமெண்ட் கொடுத்துள்ளார் என்றால் அதைபற்றி தெரியாது. இந்த வழக்கு காசோலைக்கு மட்டும் ஸ்டாப் பேமெண்ட் கொடுத்துள்ள விவரம் தெரியும். எதிரி மொத்தம் 36 காசோலைகளுக்கு ஸ்டாப் பேமெண்ட் கொடுத்துள்ளார் என்றாலும், இந்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்து இல்லை என்று சொன்னால் ஸ்டாப் பேமெண்ட் கொடுத்ததால் கையெழுத்தை ஒப்பிட்டு பார்க்கவேண்டிய அவசியமில்லை என்பதால் பார்க்கவில்லை.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.